පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 79

පාර්ලිමේන්තුවේ ආණ්ඩු පක්ෂයේ ප්‍රධාන සංවිධායක කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் அது தொடர்பாக மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No. : 79

Office of the Chief Government Whip of Parliament

Submission of observations of the Hon. Minister in charge of the Institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

පාර්ලිමේන්තුවේ ආණ්ඩු පක්ෂයේ ප්‍රධාන සංවිධායක කාර්යාලය
பாராளுமன்ற அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம்
Office of the Chief Government Whip of Parliament

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகளும் முன்னெடுப்புகளும் பற்றிய அறிக்கையிடல்

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம்

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்/தற்போதைய நிலை
நிதி ஒழுங்குவிதிகள் 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 ஆம் ஆண்டிலே உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டு அது தொடக்கம் உரியவாறு வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு, நடவக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது.
நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக இணையத்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற இணையத்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்பிடுவதற்காக வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. மொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இனங்காணப்பட்ட நிலைபெறுதகு நோக்கங்களை எய்துவதற்காக அடைய வேண்டிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம் தனியான செலவினத் தலைப்பின் கீழ் இயங்கிவருகின்ற போதிலும், இந்த அலுவலகத்தின் பணிகள் இலங்கைப் பாராளுமன்றத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலுவலகத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைப்புச் செய்யப்படுவதுடன், குறித்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களது தகவல்களும் இலங்கைப் பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, தனியான இணையத்தளம் ஒன்றினை பராமரிக்க வேண்டிய தேவை இதுவரை எழாத போதிலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைகளின் அடிப்படையில் தனியான இணையத்தளமொன்றை பராமரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுக்கான செயல்திறன் ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகத்தினால் அரசாங்கத்தின் அனைத்து அமைச்சுக்களினதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டதிட்டங்கள் ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுவதற்கான பங்களிப்பினை பெற்றுக்கொடுத்து நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

எம்.டப்ளியூ. ஜகத் குமார
அரசாங்கக்கட்சி முதற்கோலாசானின் செயலாளர்

2024.08. 22